1998 மார்ச் 21]

47—

திண்டுக்கல் வட்டத்தை இரண்டாகப் பிரித்தல்

***9983—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் வட்டத்தை இரண்டு வட்டங்களாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இப்பொருள் குறித்த செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.

திரு. இரா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் வட்டம் மிகப் பெரிய வட்டம். சின்னாளப்பட்டி ஒன்றியம், ஆத்தூர் ஒன்றியம், ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் இப்படிப் பல ஊராட்சிகளை உள்ளடக்கிய மிகப் பெரிய வட்டமாகும். மக்கள் தொகையும் மிகவும் அதிகம். எனவே, அரசு நிர்வாக நலன் கருதியும், மக்கள் நலன் கருதியும், இந்த வட்டத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு மீண்டும் அமைச்சர் அவர்கள் பரிசிலனை செய்வார்களா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு உறுப்பினரின் உணர்வை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் நடப்பு ஆண்டில், புதிய வட்டங்கள், புதிய வருவாய்க் கோட்டங்கள் போன்ற நிருவாக அமைப்புக்களை நிதிநிலை காரணமாக உருவாக்குவதில்லை என்று 20-6-1997-ல் அரசு முடிவு எடுத்துள்ளது. எனவே, வரும் 20-6-1998-க்குப் பிறகு உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். பரிசீலிக்கப்படும் என்று சொல்லுகின்ற போது, ஒத்துக்கொண்டதாகப் பொருளாகாது. ஒத்துக்கொள்ளக்கூடியதாக இருக்குமேயானால் நிச்சயம் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்: 48, திரு. இரா. பெர்னார்டு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.